## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண்.75/2020

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 24.03.2026 | | |
|---|---|---|---|
| பெயர்: | இளங்கோவன் (PW2– Cross ) | தகப்பனார் பெயர்: | பட்டுசாமி |
| கிராமம்: | மருவத்தூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | கொத்தனார் | வயது : | 49/2026 |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 24.03.2026</u>

**(ஆரம்பித்த நேரம்–12.15)**

1. நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். அந்த அழைப்பாணை எனது வீட்டில் உள்ளது. ஆனால், வீட்டில் எங்கே என்று தெரியவில்லை. வாதி பிரதிவாதிக்கு வட்டிக்கு பணம் கொடுத்தாரா அல்லது கைமாத்தாக கடன் கொடுத்தாரா என்றால் வட்டிக்கு கொடுக்கப்பட்டது. வட்டி எத்தனை சதவீதம் என்று எனக்கு தெரியாது. வாதி, பிரதிவாதி இருவரும் வட்டி சதவீதம் பற்றி என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான்.

2. அசல் தொகை எவ்வளவு என்றால் ரூ.15,000/– ஆகும். மேற்படி கடனை எத்தனை மாதத்திற்குள் திருப்பி தருவதாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி எங்கள் ஊர், காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர். நான் சாட்சி கையெழுத்து செய்தது காளியம்மன் கோவில் இடத்தில். சாட்சி கையெழுத்து செய்யும்போது இரண்டு பேர் உடனிருந்தார்கள். வா.சா.ஆ.1 ஆன கடனுறுதிச்சீட்டை வைத்தீஸ்வரன் கோவிலை சேர்ந்த பன்னீர்செல்வம் என்பவர் எழுதினார்.

3. எங்கள் ஊரில் படித்தவர்கள் நிறைய பேர் இருக்கும்போது பக்கத்து ஊரை

சேர்ந்தவர் வா.சா.ஆ.1 ஐ எழுதினார் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மருவத்தூரில் குடியிருந்து வருகிறார். வாதிக்கு சொந்தமாக விவசாய நிலம் சுமார் 1 ஏக்கர் இருக்கும். வாதியும், நானும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதி எங்கள் ஊரின் பக்கத்து தெருவை சேர்ந்தவர்.

4. வாதி வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழிலை செய்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு விவசாயத்தை தவிர வேறு வருமானங்கள் ஏதும் கிடையாது. நான் கடனுறுதிச்சீட்டில் கையெழுத்து செய்துள்ளதால் என்னை அழைத்துக்கொண்டு வாதி பிரதிவாதியிடம் கடன் தொகை கேட்டாரா என்றால் ஒரு தடவை கேட்டார். வருடம், மாதம், தேதி ஞாபகம் இல்லை. கடனுறுதிச்சீட்டை பூர்த்தி செய்த பேனாவால் தான் நான் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

5. கடனுறுதிச்சீட்டை பூர்த்தி செய்த பேனாவும், நான் கையெழுத்து செய்த பேனாவும் வேறு வேறு மையினால் உள்ளது என்றால் சரியல்ல. கடனுறுதிச்சீட்டில் எழுதப்பட்ட தேதியில் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி போலியாக வா.சா.ஆ.1 ஐ தயார் செய்து பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் நான் வாதிக்கு ஆதரவாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன் வாங்கும்போது வாதியிடமிருந்து எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்றால் ரூ.500/– தாள்களாக பெற்றுக்கொண்டார். எத்தனை ரூபாய் தாள்கள் என்று எனக்கு தெரியாது.

6. வாதிக்கு வட்டிக்கு விடும் அளவுக்கு பொருளாதார வசதி கிடையாது என்றாலும், வாதிக்கு ஆதரவாக அவர் அழைத்தன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எந்த வருடத்தில், எந்த தேதியில் கடன் கொடுக்கப்பட்டது என்று ஞாபகம் இல்லை. வாதிக்கு நான் வா.சா.ஆ–1ல் எந்த கையெழுத்தும் செய்யாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.31)**